# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No. 454/2016 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 13 (PW– 13 ) |
| பெயர் | :– | மருத்துவர் கலைச்செல்வி |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றவில்லை மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 07.08.2015- ஆம் தேதியன்று அதே மருத்துவமனையில் அவசர சிகிச்சைபிரிவில் மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை 05.00 மணியளவில் சித்தையன் மனைவி அலமேலு என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு காயம் எப்படி ஏற்பட்டது என்று நான் விசாரித்தபோது 07.08.2015- ஆம் தேதியன்று பகல் 03- மணிக்கு தன்வீட்டிற்கு பக்கத்தில் வசிக்கும் 07 தெரிந்த நபர்கள் கையாலும் கல்லாலும் அடித்ததாகவும் சொன்னார். அவரை நான் பரிசோதித்தேன். வெளிபுற காயங்கள் எதுவும் இல்லை. உள்நோயாளியாக அவரை அனுமதித்தேன். அது சம்மந்தமாக நான் பதிவுசெய்த விபத்து தகவல் பதிவேடு **அ.சா.ஆ-07** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அன்றே மாலை 05.25 மணிக்கு ஐய்யனார் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு காயம் எப்படி ஏற்பட்டது என்று நான் விசாரித்தபோது 15 தெரிந்த நபர்கள் அன்று மாலை 03.00 மணிக்கு அவருடைய வீட்டிற்கு அருகில் கத்தியால் தாக்கியதாக சொன்னார். அவருக்கும் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. அது சம்மந்தமாக பதிவு செய்த விபத்து தகவல் பதிவேடு **அ.சா.ஆ-08** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு இருந்ததாக சொல்லப்பட்ட காயம் சாதாரண காயம் என்ற காயச்சான்று வழக்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ-09** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அலமேலுவின் விபத்து பதிவேட்டில் அவர் வந்த நேரம் 05.05 மணி என்றும் ஐய்யனார் விபத்து பதிவேட்டில் அவர் வந்த நேரம் 05.25 மணி என்றும் உள்ளது என்றால் சரிதான். இருவரையும் சித்தையன் என்பவர்தான் மருத்துவமனைக்கு

கொண்டு வந்ததாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். ஐய்யனாருக்கு நான் விபத்து தகவல் பதிவேடு பதிவு செய்யவில்லை என்றால் அதில் என் கையொப்பம் இல்லை. காயமே இல்லாமல் சாதாரண காயம் என்று ஏன் காயச்சான்று வழங்கினேன் என்றால் வலி இருப்பதாக சொன்னதால் வழங்கினேன். வலிப்பதாக அவர் பொய் கூட சொல்லியிருக்கலாம் என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.